NOVEMBER 2024

www.balamandir.org

மலர்-1 இதழ்-8

MALARUM MOTTUKKAL

பால மந்திர் கின்ஷிப் கேர் (KINSHIP CARE) செய்திமடல்

மலரும் மொட்டுக்கள்

காமராஜர் நினைவு தினம்:



ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் 2 ஆம் தேதி எங்கள் நிறுவனர் திரு.கே. காமராஜரின் நினைவு நாளில் பால மந்திர் குழந்தைகள் தி.நகரில் உள்ள காமராஜர் நினைவு இல்லத்திற்குச் சென்று மரியாதையைச் செலுத்துவார்கள். பால மந்திர் நிறுவப்பட்டு 75 ஆண்டுகளாகியும்
அவர்கள் எங்களுக்காக விட்டுச் சென்ற பணிகள், குழந்தைகளை மையப்படுத்திய மரபுகள் மற்றும் கொள்கைகள் எங்கள் வளர்ச்சிக்கு இன்றும் வழிகாட்டியாக இருக்கிறது.

பால மந்திரில் சுற்றுச்சூழல் விழிப்புணர்வு:



சுற்றுச்சூழல் பாதுகாப்பைக் கருப்பொருளாகக் கொண்டு "இந்தியச் சுற்றுச்சூழல் அறக்கட்டளையின் (இஎஃப்ஐ)" தன்னார்வலர்கள் பால மந்திர் வித்தியாலயா தொடக்கப் பள்ளியின் சுவரில் ஓவியங்களை வரைந்தனர். பால மந்திர் இல்லத்தைச் சேர்ந்த குழந்தைகளும் இதில் பங்கேற்று தங்கள் திறமைகளை வெளிப்படுத்தினர்.நிகழ்ச்சிக்குப் பிறகு, இந்தியச் சுற்றுச்சூழல் அறக்கட்டளையின் (இஎஃப்ஐ) நிறுவனர் திரு.அருண் கிருஷ்ணமூர்த்தி சுற்றுச்சூழல் பாதுகாப்பின் முக்கியத்துவம் குறித்து குழந்தைகளிடம் உரையாற்றினார்

தீபாவளி கொண்டாட்டம்:



பால மந்தரில் தீபாவளி பண்டிகை குழந்தைகளால் மிகவும் எதிர்பார்க்கப்பட்ட கொண்டாட்டம். குழந்தைகள் அனைவரும் புத்தாடைகள் அணிந்து சுவையான உணவுக்குப் பிறகு, பட்டாசுகளை வெடித்து அன்றைய தினத்தை மிகவும் மகிழ்ச்சியாகக் கழித்தனர்.

உங்கள் சமூகப் பணியாளர்களைப் பற்றி அறிந்து கொள்வோம் :



திரு. வி.அஜித் செல்வராஜ், வேலூர் மாவட்டத்தைப் பூர்விகமாகக் கொண்டவர். இவர் இளங்கலை பொறியியல் (BE) மற்றும் முதுகலை சமூகப்பணி(MSW) பட்டம் பெற்றுள்ளார். கடந்த ஏழு ஆண்டுகாலமாகக் குழந்தைகள் நலன் சார்ந்த திட்டங்களில் பணிபுரிந்த அனுபவம் கொண்டவர். கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் பாலமந்திர் நிறுவனத்தில் கின்ஷிப்கேர் சமூகப்பணியாளராக இணைந்தார். வேலூர், ராணிப்பேட்டை மற்றும் திருப்பத்தூர் ஆகிய மாவட்டங்களில் சுமார் 77 குடும்பங்களைக் சேர்ந்த 142 குழந்தைகளை கவனித்துவருகிறார்.

இவர் எழுதுவதில் ஆற்றல் பெற்றவர். சமூகம் - சுற்றுசூழல் - அரசியல் - குழந்தைகள் நலன் சார்ந்த கட்டுரைகளை அவ்வப்போது எழுதிவருகிறார்

காஞ்சிபுரம் மாரத்தான் போட்டி:

அக்டோபரில் காஞ்சிபுரத்தில் நடைபெற்ற மாரத்தான் போட்டியில். கின்ஷிப் கேர் காஞ்சிபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த 10 குழந்தைகள் சமூக பணியாளர் பெஞ்சமின் உதவியால் பங்கேற்றனர். இதில் கலந்து கொண்ட ஒவ்வொருவரையும் உற்சாகப்படுத்தும் வகையில் அனைவருக்கும் பதக்கம் மற்றும் சான்றிதழ் வழங்கப்பட்டது.





மாரத்தானைத் தொடர்ந்து, அன்றைய நிகழ்ச்சி கால்பந்து விளையாட்டுடன் நிறைவுற்றது. குழந்தைகளிடமிருந்து வரும் கருத்துகள் மிகவும் ஊக்கமளிப்பதாக இருந்தது. இந்த அனுபவம் அனைத்து குழந்தைகளுக்கும் தன்னம்பிக்கை மற்றும் சாதனை உணர்வை வளர்க்கவும் உதவியது.



இந்த முயற்சி உடல் ஆரோக்கியம் மற்றும் சமூக ஈடுபாட்டை ஊக்குவித்தது மட்டுமல்லாமல், எங்கள் பராமரிப்பில் உள்ள குழந்தைகளை ஆதரிப்பதற்கும் மேம்படுத்துவதற்கும் எங்கள் நோக்கத்தை வலுப்படுத்தியது.

கின்ஷிப்கேர் நிகழ்ச்சி – வேலூர்





வேலூரில் கின்ஷிப் கேர் நிகழ்ச்சி 20/10/2024 அன்று ஏலகிரி ஹாலில் நடைபெற்றது. இதில், 55 குடும்பங்களைச் சேர்ந்த 103 குழந்தைகள் பங்கேற்றனர். இதில் வேலூர் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் திருமதி. சங்கீத் கலந்துக் கொண்டார். அவர் அரசு நல திட்டங்கள் மற்றும் குழந்தைகளின் பாதுகாப்பு குறித்துப் பேசினார்.

பால மந்திரைச் சேர்ந்த திரு. நடராஜன், திருமதி.விஜயலட்சுமி ஆகியோர் 10 மற்றும் 9 ஆம் வகுப்பு குழந்தைகளுடன் கலந்துரையாடினர். குழந்தைகளைத் தங்கள் படிப்பில் கவனம் செலுத்த ஊக்குவித்தனர் மற்றும் அவர்களுடன் கல்வியின் முக்கியத்துவம் குறித்து விவாதித்தனர். பெற்றோர்களுடனான உரையாடலின்போது, தனிநபர் ஆலோசனை அமர்வு கிடைப்பது குறித்த தகவல்களும் தெரிவிக்கப்பட்டன. பகிரப்பட்ட தகவல்கள் பெற்றோருக்கு மிகவும் பயனுள்ளதாக இருந்தன, மேலும் அனைவருக்கும் கின்ஷிப் கேர் மற்றும் பால மந்திர் பற்றிய தெளிவான புரிதல் இந்த நிகழ்ச்சியின் மூலமாகக் கிடைத்தது.

பால மந்திர் - கின்ஷிப் கேர்:

அக்டோபர் 2024 நிலவரப்படி, சென்னை மற்றும் கோயம்புத்தூர் மையங்களில் 831 குடும்பங்களும் 1461 குழந்தைகளும் கின்ஷிப் கேர் திட்டத்தின் பயனாளியாக உள்ளனர். இவர்கள் அனைவரும் பால மந்தரின் பல்வேறு சேவைகளால் பயனடைந்து வருகின்றனர்.









குழந்தைகளுக்காக வேடிக்கை விளையாட்டுகள், கலை மற்றும் கைவினைச் செயல்பாடுகள் ஏற்பாடு செய்யப்பட்டது. அனைத்து நிகழ்சிகளிலும் குழந்தைகள் மகிழ்ச்சியுடன் பங்கேற்றனர்!

பெற்றோருக்கான பகுதி-Parents' corner

குழந்தைகள் வாழ்க்கையின் அனுபவத்தை எவ்வாறு கையாள்வது என்பதைப் பற்றி விளையாட்டின் மூலமே கற்றுக் கொள்கிறார்கள் விளையாட்டு என்றால் குழந்தைகள் வீட்டிலிருந்து கொண்டே மொபைலில் விளையாடுவது அல்ல, குழந்தைகள் வீட்டை விட்டு வெளியே சென்று அவர்களின் சக நண்பர்களுடன் சேர்ந்து விளையாட வேண்டும்.

இவ்வாறு விளையாடுவதால் ஏற்படும் நன்மைகள்:



- ஆற்றல் சரியான முறையில் செலவிடப்படுகிறது.
- கற்பனை திறன் அதிகரிக்கிறது.
- முடிவெடுக்கும் திறனை வளர்த்துக் கொள்கிறார்கள்.
- வெற்றி, தோல்வியைக் கையாள கற்றுக் கொள்கிறார்கள்.
- அறிவாற்றல் மற்றும் மொழித் திறனையும் வளர்த்துக் கொள்கிறார்கள்.
- இதனால் பெற்றோர்கள் குழந்தைகளுக்கு வெளியே சென்று விளையாட வாய்ப்பு கொடுக்க வேண்டும். அவர்களின் சக நண்பர்களுடன் விளையாடுவதை ஊக்குவிக்க வேண்டும்.

கைமேல் கல்வி:



ஏழாம் வகுப்பு மாணவர்களுக்குக் கைமேல் கல்வி வகுப்புகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. இந்த வகுப்புகளில் செயல்பாடு வழி கற்றல் மூலம் கணிதம் கற்பிக்கப்படுகிறது. இது கணிதப்பாடத்தில் சிரமப்படும் குழந்தைகளுக்கு அதனை எளிதில் புரிந்து கொள்ள உதவும். வாரத்தில் இரண்டு நாட்கள் வகுப்புகள் நடத்தப்படுகின்றன.

அதற்கான செயல்பாடுகள் மற்றும் பயிற்சி கணக்குகளைத் தங்களுக்கு கொடுக்கப்பட்ட டேப்கள் (Tab) மூலம் பயிற்சி செய்ய வேண்டும். வாரம் முழுவதும் அவர்களை வழி நடத்துவதற்காக ஒரு வழி காட்டியாளரும் உதவி புரிவார். குழந்தைகள் வகுப்பின் முக்கியத்துவத்தைப் புரிந்துகொண்டு அதில் ஆர்வத்துடன் பங்கேற்கிறார்கள். உங்கள் குழந்தைகள் KMK திட்டத்தின் நன்மைகளைப் பெற வகுப்புகளுக்கு அவர்கள் தொடர்ந்து வருவது மிகவும் அவசியம்.

புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட அரசுத் திட்டம் :

சத்தியவாணிமுத்து அம்மையார் நினைவு இலவச தையல் இயந்திரம் வழங்கும் திட்டம் (சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை):

கைம்பெண்கள்(விதவை), பொருளாதாரத்தில் நலிந்த பிரிவைச் சேர்ந்த பெண்கள், மாற்றுத்திறனாளி ஆண்கள் (ம) பெண்கள், சமூக ரீதியாகப் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

தகுதிகள் : 20 - 40 வயது, தையல் தெரிந்திருக்க வேண்டும். ஆண்டு வருமானம் ரூ.72,000/-க்கு மிகாமல் இருத்தல் வேண்டும்.

விண்ணப்பிக்க:

இ-சேவை மையம்மூலம் விண்ணப்பிக்கலாம்.

அடுத்த மாத நிகழ்ச்சிகள்:



கோவையில் கின்ஷிப் கேர் நிகழ்ச்சி 17/11/2024 அன்ற திட்டமிடப்பட்டுள்ளது. இந்த முகாம்பற்றிய விபரங்கள் அடுத்த செய்திமடலில் பார்கலாம்.

YOUNG ACHIEVERS



பவதர்ஷினி காஞ்சிபுரம்
தமிழ் கட்டுரை போட்டி.



தீபன் (காஞ்சிபுரம்)
சயின்ஸ் எக்ஸிபிஷன்



கீதா ஸ்ரீ (காஞ்சிபுரம்)
கராத்தே போட்டி

YOUNG ACHIEVERS



மனோஜ் (சென்னை) சர்வதேச அளவிலான கராத்தே போட்டி.



லோகேஸ்வரன் (சென்னை) சர்வதேச அளவிலான கராத்தே போட்டி.



திஷா (கோயம்புத்தூர்) பேச்சுப் போட்டியில் முதலிடம்.



பாபி ஸ்ரீ (கிருஷ்ணகிரி) ஓட்டப்பந்தயத்தில் 2 வது இடம்.



தர்ஷன் (நாமக்கல்) மரத்தான் போட்டி.



அனன்யா (சென்னை) சப் ஜூனியர் பங்கேற்பு சான்றிதழ்.



ரக்ஷிதா ஆர் - (திருவண்ணாமலை) கையெழுத்து மற்றும் கவிதை சொல்லும் போட்டிய.



எஸ்.அகீத் (சேலம்) சிலம்பத்தில் முதலிடம்.



ஏ. இலக்கியா (சேலம்) கோ - கோ போட்டியில் இரண்டாம் இடம்.

YOUNG ACHIEVERS



கே.ஆர்.ஆதியா வீர் வெங்கட் (சேலம்) சிலம்பத்தில் சாம்பியன் பட்டம் வென்றார்.



மோனேஷ் (காஞ்சிபுரம்) கராத்தே போட்டி



தீக்ஷா (காஞ்சிபுரம்) ஆங்கில கையெழுத்துப் போட்டி.



ஆர்.சஞ்சீவ் (சேலம்) கையெழுத்துப் போட்டி.



ருத்திகா (சென்னை)ஓவியப் போட்டியில் முதல் பரிசு.



லித்திஷ் மற்றும் ஒலிவியா (சென்னை) விளையாட்டு போட்டி.

மேலும் பல நிகழ்ச்சிகள் மற்றும் மகிழ்ச்சிகளை கொண்டாடுவதற்காக நாங்கள் மீண்டும் வருகிறோம். உங்கள் வாழ்வில் மாற்றத்தை உருவாக்க, எப்போதும் உங்கள் அருகில் இருப்போம்!